Judicial Form No.53
(see Rule 42)
DEPOSITION OF WITNESS
Chapter XXIII Code of Criminal Procedure
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

STC.No:–18/2020 Date:– 04.03.2026

Deposition of witness for Accused:– DW :–1

| | | | |
|---|---|---|---|
| Name | செல்வம் | Age | |
| Father/Husband Name | | Taluk | |
| Village | | | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act 1969 | | | |

<u>**முதல் நிலை விசாரணை:–**</u>

1. நான் இவ்வழக்கின் எதிரி ஆவேன். எதிரி தரப்பு சாட்சி 1 ஆவேன். நான் திருப்பூர் மாவட்டம், எலுகாம்வலசில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வந்தேன். அதேபோல் நிதி நிறுவனமும் நடத்தி வந்தேன். இவ்வழக்கினை புகார்தாரர் செல்லப்பன் என்மீது இந்த காசோலை மோசடி வழக்கைத் தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கின் புகார்தாரரை இவ்வழக்கிற்கு முன்பு நான் பார்த்ததில்லை.அவரை யார் என்று தெரியாது. அவர் இவ்வழக்கு விசாரணையின்போது இறந்துவிட்டார். அவருக்குப் பின் அவரது மகன் கார்த்திகேயன் இவ்வழக்கை நடத்தி வருகிறார்.

2. இவ்வழக்கில் ஆஜராகிய பின்புதான் தற்போதைய புகார்தாரர் கார்த்திக்கைத் தெரியவந்தது. அதற்கு முன்பு அவரைப் பார்த்ததில்லை. நான் 14.11.2016ல் வியாபாரக் கடனுக்காக ரூ.15,00,000/–யை பிரமசரி நோட்டில் கையெழுத்து போட்டு வாங்கியதாக இவ்வழக்கில் கூறியது உண்மையல்ல. நான் மேற்படி தொகையை வாங்கவில்லை. அந்த தேதியன்று நான் புகார்தாரரை பார்த்ததில்லை.

3. இவ்வழக்கில் கூறியதுபோல் மேற்படி கடன் தொகையை தீர்க்கும் வகையில் மேற்படி கடன் காசோலையை நான் புகார்தாரருக்கு அளிக்கவில்லை. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமசரி நோட்டில் சாட்சிக் கையெழுத்து செய்த நல்லசாமி என்பவர் என்னுடைய உறவினர் ஆவார். அவரது அப்பா ராமசாமிக் கவுண்டரும், நானும் மற்றும் சிலரும் பதிவு செய்யப்பட்ட ஸ்ரீ வேலவன் பைனான்ஸ் என்ற நிதி நிறுவனத்தை நடத்தி வந்தோம்.

4. அந்த நிதி நிறுவனத்தில் தகராறு ஏற்பட்டதால் மூட வேண்டிய சூழல் ஏற்பட்டது. மேற்படி நிதி நிறுவனத்தில் எனக்கும் ராமசாமி கவுண்டருக்கும் தகராறு ஏற்பட்டதால் மேற்படி நிறுவனத்தில் நான் பாதுகாப்பாக வைத்திருந்த அசல் கூட்டுப்பங்கு பத்திரம், பயன்படுத்தப்படாத காசோலைகள் ஆகியவற்றை ராமசாமிக் கவுண்டர் எடுத்துச் சென்றுவிட்டார். அந்த விபரம் எனக்கு இவ்வழக்கிற்கான அறிவிப்பு வந்த பின்புதான் தெரியவந்தது.

5. நான் பின்பு சத்தியமங்கலம் வந்து விசாரித்தபோதுதான் பிரமசரி நோட்டில் சாட்சிக் கையெழுத்து செய்த நல்லசிவம் என்பவர் நடத்தி வந்த உதயா பைனான்ஸ் என்ற நிதி நிறுவனத்தில் கமிசன் ஏஜென்டாக புகார்தாரர் செல்லப்பனும், கார்த்திக்கும் வேலை பார்த்த விபரம் எனக்கு தெரியவந்தது. இந்நீதிமன்றத்தில் ஆஜரான பின்புதான் மேற்படி செல்லப்பனும், கார்த்திக்கும் நிறையே காசோலை மோசடி வழக்குகள் நீதிமன்றத்தில் நல்லசாமி மூலம் தாக்கல் செய்த விபரம் தெரியவந்தது.

6. நான் புகார்தாரரிடம் எவ்விதமான தொகையையும் கடன் பெறவில்லை ராமசாமிக் கவுண்டர் முன்விரோதம்காரணமாக பயன்படுத்தப்படாத காசோலையை கொடுத்து என் கையெழுத்தை மோசாடியாகப் போட்டு இவ்வழக்கைத் தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள புரோ நோட்டிலுள்ள கையெழுத்து என்னுடையது கிடையாது. ஆகவே, என்னை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**குறுக்கு விசாரணை:–** இல்லை.

**மறுவிசாரணை –** இல்லை.